සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

Provincial Department of Education - NWP

වැඩමෙල් මාකාණක් කල්විත් තිණෙක්කළුම්

80 | T | II

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018

First Term Test - Grade 10 - 2018

முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

சுட்டெண் : ..... **தகவல் தொடர்பாடலும் தொழிநுட்பவியலும் - II** **ஒரு மணித்தியாலயம்**

◆ **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்க.**

01. பொருத்தமான விடைகளை சுருக்கமாக தருக.
    1. பொருளொன்றின் மேலதிக விபரங்களை பெறுவதற்காக அப்பொருளின் மேலே ஒட்டப்பட்டிருக்கும் இரண்டு வகையான குறிமுறை குறியீடுகளை தருக.
    2. முறைவழிப்படுத்தப்பட்ட தரவுகளினால் பெறப்பட்ட தகவலானது தீர்மானம் மேற்கொள்ள பயன்படும். அத்தகவல்கள் தரமுடையதாக இருத்தல் வேண்டும்.
       பன்பறி தகவலின் நான்கு இயல்புகளை தருக.
    3. மருத்துவத்துறையில் நோய்களை கண்டறியவும் சிகிச்சை வழங்கவும் பயன்படும் நான்கு உபகரணங்களை தருக.
    4. பல்திறவாக்கல் தட்டு (*DVD-RAW*) டன் ஒப்பிடும் போது பளிச்சிட்டு நினைவகத்தின் இரண்டு நன்மைகளை தருக.
    5. பின்வரும் அட்டவணையின் A, B, C மற்றும் D என்ற இடைவெளிகளில் கணினி தலைமுறைகளில் பயன்படுத்தப்பட்ட பிரதான தொழிநுட்ப கூறுகளைத் தருக.

கணினி தலைமுறை	பிரதான தொழிநுட்ப கூறு
முதலாம் தலைமுறை	A. .....
இரண்டாம் தலைமுறை	B. .....
மூன்றாம் தலைமுறை	C. .....
நான்காம் தலைமுறை	D. .....

    6. துணை நினைவகங்களை அதில் பயன்படுத்தப்படும் தொழிநுட்பத்திற்கேற்ப மூன்று வகைப்படுத்தலாம். அவ்வாறான இரண்டு வகைகளை குறிப்பிட்டு அவற்றிற்கான இரண்டு உதாரணங்களை எழுதுக.
    7. வழிப்படுத்தப்பட்ட மற்றும் வழிப்படுத்தப்படாத ஊடகங்களுக்கு இரண்டு உதாரணங்கள் வீதம் எழுதுக.
    8. பின்வரும் 11001110 இரும எண்ணை பதின்ம எண்ணில் மாற்றுக.
    9. 1KB யிலுள்ள பைட்டுக்களின் எண்ணிக்கையை எண்ம எண்ணில் எவ்வாறு குறிப்பிடலாம்?
    10. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமானது எமது அன்றாட வாழ்க்கை செயற்பாடுகளை திறமையாக செயற்படுத்த உதவினாலும் விரும்பத்தகாத விளைவுகளையும் ஏற்படுத்தும். சமூகத்திற்கு ஏற்படுத்தும் அவ்வாறான விரும்பத்தகாத விளைவுகள் இரண்டை தருக. (20 புள்ளிகள்)

02. (A) பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் உபகரணம் ஒன்று வீதம் எழுதுக.
    1. வரவு அட்டை (*debit card*) பயன்படுத்தி பணத்தை மீளப்பெறல்.
    2. பத்திரிக்கையில் உள்ள ஒரு விளம்பரத்தில் காணப்படும் குறிமுறையை தருவதன் மூலம் அதன் தகவல்களை பெறல்.
    3. ஒரு நிறுவனத்தின் ஊழியர்களின் வரவை பதிவு செய்தல்.
    4. மீ அங்காடியிலிருந்து (*super market*) கொள்வனவு செய்யப்பட்ட பொருளின் விபரங்களை அதன் பட்டைக் குறிமுறையிலிருந்து பெறுதல். (½ x 4 = 2 புள்ளி)

    (B) 1. மின் அரசாங்கம் வர்த்தகர்களுக்கு வழங்கும் சேவைகள் இரண்டு எழுதுக.
    2. தொலைக் கல்வியின் இரண்டு அம்சங்களை தருக.
    3. விவசாயி தனது விவசாய செயற்பாடுகளில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை பயன்படுத்தும் மூன்று முறைகளை எழுதுக.
    4. போக்குவரத்துத் துறையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

03. கணினியின் பரினாம வளர்ச்சியானது கணித்தல்களுக்காக பயன்படுத்தப்பட்ட எண் சட்டத்தின் கண்டுபிடிப்பானதால் கணினிகளின் உருவாக்கத்திற்கு வித்திட்டுள்ளது.

A. பின்வரும் கூற்றுக்களின் இடைவெளிக்கு பொருத்தமான சொற்களை அடைப்பிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

1. உலகின் முதலாவது கூட்டற் பொறியை கண்டுபிடித்தவர் ..... ஆவார்.
2. சார்ல்ஸ் பாபேஜ் கண்டுபிடித்த பகுப்புப் பொறியில் பயன்படுத்தப்பட்ட எண்ணக்கரு ..... ஆகும்.
3. உலகின் முதலாவது உள்ளீடு, முறைவழியாக்கம், வெளியீடு மற்றும் தேக்கம் என்பன அடிப்படையாக கொண்ட இலக்கமுறை கணினியை கண்டு பிடித்தவர் ..... ஆவார்.
4. உலகின் முதலாவது கணினி செய்நிரலாளர் ..... ஆவார்.
5. ..... என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட துளை அட்டை முறைமையானது பிற்காலத்தில் கணினி தேக்க எண்ணக்கருவுக்கு வித்திட்டது.

(அடா ஒகஸ்டா லொவலேக், ஜோன் ஐங்குவாட், துளையட்டை, பிலேஸி பஸ்கல், தேக்கம், மவுஸ்லி மற்றும் ஏக்காட்) (5 புள்ளிகள்)

B. கணினி தலைமுறைகள் உருவாக்கத்திற்கு காலாகாலம் பயன்படுத்தப்பட்ட தொழிநுட்ப மாறுதல்களே காரணமாக அமைந்தது.


1. கணினியின் பரிணாம வளர்ச்சியின் போது ஏற்பட்ட தொழிநுட்ப மாற்றங்கள் மூன்றைத் தருக.
2. கணினியின் அடிப்படை எண்ணக்கருவாகிய உள்ளீடு, முறைவழியாக்கம் மற்றும் வெளியீடு என்பன இப்போது குரல் அடையாளம் காணல், எழுத்து அடையாளம் காணல் போன்ற சிக்கலான பணிகள் வரை விரிவடைந்துள்ளது.
   ஏனைய தலைதுறைகளுடன் ஒப்பிடும் போது ஐந்தாம் தலைமுறை கணினியின் நன்மைகள் இரண்டை எழுதுக. (2 புள்ளிகள்)

04. இடோரேவா மகா வித்தியாலய ICT ஆய்வு கூடத்தின் பொறுப்பாசிரியர் ஆய்வு கூடத்திலுள்ள பத்து கணினிகளை வலையமைப்பாக்க விரும்புகிறார்.

A. 1. மூன்று வகையான கணினி வலையமைப்புக்களை எழுதி அவற்றில் இடோரேகம பாடசாலை ஆய்வு கூடத்திற்கு பொருத்தமான வகையை குறிப்பிடுக.
   2. குவியத்தை (Hub) விட ஆளி (switch) வலையமைப்பாக்கத்திற்கு மிகவும் பொருத்தமானதென பொறுப்பாசிரியர் கூறுகிறார். அதற்கான ஒரு காரணத்தை எழுதுக.
   3. நான்கு இடத்தியல் வலையமைப்புக்களை தந்து அவற்றில் இரண்டை பற்றி விளக்குக.

B. பின்வரும் வரிப்படத்தை கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.

1. A, B, C மற்றும் D என்பவற்றினால் குறிப்பிடப்படும் கூறுகளின் பெயர்களைத் தருக.
2. A யினால் குறிக்கும் சாதனத்தின் தொழிற்பாட்டை விளக்குக.
3. கணினி வலையமைப்பின் இரண்டு நன்மைகள் மற்றும் இரண்டு தீமைகள் எழுதுக.



05. A. எண்முறைமையில் அடியை தீர்மானிப்பது அதில் பயன்படுத்தப்படும் இலக்கங்களின் எண்ணிக்கை ஆகும். இதனை கொண்டு பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

	எண்முறைமையின் அடி பெறுமானம்	பயன்படுத்தப்படும் அதிகூடிய இலக்கங்களின் எண்ணிக்கை
1.	2	.....
2.	.....	7
3.	10	.....
4.	16	.....

B. ரவிது தனது தாயிடமிருந்து ரூபாய் 500 ஐ புத்தகம் வாங்குவதற்காக பெற்றுக்கொண்டான். அப்புத்தகத்தின் விலை ரூபாய் 60 ஆகும். மிகுதிப்பணத்திற்கு ரூபாய் F_{16} பெறுமதியுடைய இரண்டு பேனைகளை வாங்கினான்.

1. புத்தகத்தின் விலையை பதின்ம பெறுமானத்தில் தருக.
2. புத்தகத்திற்கும் மற்றும் பேனைகள் இரண்டிற்குமான மொத்த செலவை பதின்ம பெறுமானத்தில் தருக.
3. கையிலுள்ள மிகுதிப்பணத்தை இரும பெறுமானத்தில் தருக.
4. பின்வருவனவற்றின் அதிகூடிய பொருளுடைய இலக்கத்தையும் குறைந்த பொருளுடைய இலக்கத்தையும் எழுதுக.

இலக்கம்	MSD	LSD
31	.....	.....
12.500	.....	.....
0.0032	.....	.....

06. A. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா? அல்லது பொய்யானதா என குறிப்பிடுக.

a) ஓர் எண்முறைமையின் அடிப்பெறுமானம் n ஆயின் அவ்வெண்முறைமையில் பயன்படுத்தப்படும் உயர்ந்த பெறுமானம் உடைய இலக்கத்தை $n+1$ என குறிக்கலாம்.

b) எண்ம எண்முறைமையிலுள்ள இலக்கமொன்றை மூன்று இரும இலக்கத்தினால் பிரதிநிதித்துவப் படுத்தலாம்.

c) இரும, எண்ம, பதின்ம மற்றும் பதினாறும் போன்ற நான்கு எண்முறைமைகளிலும் பொதுவான இரண்டு இலக்கங்களை காணலாம்?

d) ASCII குறிமுறையை விட அதிகமான எழுத்துக்களை EBCDIC குறிமுறையினால் பிரதிநிதித்துவப் படுத்தலாம்.

e) சிங்களம் மற்றும் தமிழ் மொழி எழுத்துக்களை unicode குறிமுறையினால் பிரதிநிதித்துவப் படுத்தலாம்.

B. ஒவ்வொரு குறிமுறைமையிலும் அதன் பிற்றுக்களின் எண்ணிக்கையானது அதனை பிரதிநிதிதத்துப்படுத்தக் கூடிய எழுத்துக்களின் எண்ணிக்கையை தீர்மானிகிறது. அதனடிப்படையில் பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

	குறிமுறை	பயன்படுத்தப்படும் பிற்றுக்களின் எண்ணிக்கை	பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய எழுத்துக்களின் எண்ணிக்கை
a.	BCD	.....	.....
b.	ASCII	.....	.....
c.	EBCDIC	.....	.....
d.	unicode	.....	.....

C. ASCII குறிமுறையில் “D” ஆனது 1000100 ஆக பிரதிநிதித்துவப்படின் ”F” இற்கான ASCII பெறுமானம் யாது?

07. 1. தற்கால சமூகத்தில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை கற்பதன் மூலம் நபர் ஒருவர் பெறக்கூடிய இரண்டு பயன்களை பட்டியற்படுத்துக.
2. ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தில் அன்றாட செயற்பாடுகளை கணிணி மயப்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் இரண்டை தருக.
3. கணிணி ஒன்றை வாங்கும் கவனிக்க வேண்டிய விடயங்கள் இரண்டை தருக.
4. மாணவர் என்ற வகையில் இணையத் தேடலின் இரண்டு நன்மைகளை பட்டியற்படுத்துக.
5. உலகப் பிரசித்தி பெற்ற கணிணி உற்றபத்தி நிறுவனங்களின் பெயர்கள் இரண்டை தருக.

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

8. QR குறிமுறையை வருடுவதன் மூலம் இணையத்திற்கு தொடர்பை ஏற்படுத்தும் படிமுறைகள் தரப்பட்டுள்ளன.

A. இணையத்தளத்தை திறத்தல் B. QR குறிமுறையை வருடுதல்

C. குறியகற்றல் மற்றும் இணையத்தளத்தை தொடர்பு ஏற்படுத்தல்.

மேற்கூறியவற்றை உள்ளீடு, முறைவழியாக்கம் வருவிளைவு என்ற வகையில் ஒழுங்குபடுத்தினால் பெற்றப்படும் விடை யாது ?

i. A,B,C ii. B, C, A iii. C, B, A iv. B, A, C

9. நிகழ்நிலை அங்காடி கொள்வனவு (*online shopping*) இன் நன்மை அல்லாதது.

i. 24 மணிநேரமும் செயற்படல்

ii. வங்கி அட்டையினூடாக கொடுப்பனவு மேற்கொள்ளல்

iii. விற்பனை நிலையத்திற்கு சென்று பொருட்களை கொள்வனவு செய்தல்

iv. பொருளை வாங்குவதற்கு முன்னர் அதனை அவதானிப்பதற்கான வாய்ப்பிருத்தல்.

10. கணினியின் விசேட பண்புகளை மட்டும் கொண்ட தொகுதி யாது ?

i. துல்லியத்தன்மை, இரகசியத்தன்மை, நுண்மதி, வேகம்

ii. வேகம், துல்லியத்தன்மை, நுண்மதியின்மை, பல் செயற்பாட்டுத்திறன்.

iii. பல்செயற்பாட்டுத்திறன், நுண்மதி, துல்லியத்தன்மை, பல்செயற்பாடற்றது.

iv. வேகம், துல்லியத்தன்மை, நுண்மதி, பல்செய்றபாட்டுத்திறன்.

11. நிரல் Aயில் உள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான கணினி வகைகளை நிரல் B யிலுள்ளவற்றுடன் தெடர்புபடுத்துக.

A அட்டவணை	**B** அட்டவணை
தனியாள் பயன்பாட்டிற்கான, தூக்கிச் செல்லக்கூடிய கணினி	A Mainframe Computer
விண்வெளிச் செயற்பாடு, அணு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் ஒரு வினைத்திறனான கணினி	B Tablet Computer
பல முடிவிடங்களைக் கொண்ட கணினி	C Super Computer
தற்காலத்தில் மிக பிரசித்தமான பற்பணி ஆற்றல் கொண்ட ஒரு வகைக் கணினி	D Laptop Computer

i. DCAB ii. DCBA iii. DABC iv. DBAC

12. துளையட்டையை பயன்படுத்தி மேம்படுத்தப்பட்ட முதலாவது கணினி யாது ?

i. பஸ்கலைன் ii. பகுப்புப்பொறி iii. MARK - 1 iv. ENIAC

13. முதலாம் தலைமுறை கணினி தொடர்பான பொருத்தமற்ற கூற்று யாது ?

i. அளவில் மிகப்பெரியது ii. அதிக வெப்பம் காலும்

iii. பணிச்செயல் முறைமையின் ஆரம்பம் iv. தரவு முறைவழியாக்கம் வேகம் குறைவு

14. தரப்பட்ட முறைவழியாக்கல் அலகுகளை அதன் தலைமுறைக்கேற்ப ஒழுங்குபடுத்துக.



A



B



C



D

i. DCAB ii. BACD iii. BADC iv. CBAD

15. பின்வரும் கணினியின் கட்டமைப்பு தொடர்பான கூற்றுக்களை கருதுக.

A. கணினிக்கு வழங்கப்படும் தரவு மற்றும் கட்டளைத் தொகுதிகள் முறைவழியாக்கத்திற்காக முதன்மை நினைவகத்தில் தேக்கி வைக்கப்படும்.

B. செயலியினுள் இருக்கும் கட்டுப்பட்டு அலகானது கணினியோடு இணைக்கப்பட்ட சகல பாகங்களுக்கும் சமிஞ்சைகளை அனுப்பும்.

C. தரவு மற்றும் கட்டளைத்தொகுதிகள் முதன்மை நினைவக்கதிலிருந்து கணித்தல்களுக்காக எண்கணித தர்க்க அலகிற்கு அனுப்பப்படும்.

i. Aயும் Bயும் ii. Aயும் Cயும் iii. Bயும் Cயும் iv. A,Bமற்றும் Cஎல்லாம்

16. கணினி தலைமுறைகளில் பயன்படுத்தப்பட்ட தொழிநுட்பங்களை அதன் முறைவழியாக்கல் வேகத்தின் அடிப்படையில் இறங்குவரிசைப்படுத்தப்பட்ட தொகுதி யாது ?
    i. வெற்றிடக் குழாய், திரிதடையம், ஒருங்கிணைந்த சுற்று LSIC, VLSIC
    ii. LSIC, VLSIC. வெற்றிடக்குழாய், திரிதடையம், ஒருங்கிணைந்த சுற்று
    iii. வெற்றிடக்குழாய், திரிதடையம் LSIC, VLSIC ஒருகிணைந்த சுற்று
    iv. VLSIC, LSIC. ஒருங்கிணைந்த சுற்று திரிதடையம், வெற்றிக்குழாய்

17. உள்ளீட்டு சாதனங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று யாது ?
    i. தரவுகளை உள்ளிட பயன்படும் சாதனம் ஆகும்.
    ii. அறவுறுத்தல்களை உள்ளிட பயன்படுத்தும் சாதனமாகும்.
    iii. தரவு மற்றும் அறிவுறுத்தல்களை உள்ளிட பயன்படும் சாதனமாகும்
    iv. முறைவழிப்படுத்தப்பட்ட தரவுகளை வெளியிட பயன்படுத்தப்படும் சாதனமாகும்.

18. கணினி முறைமையில் பயன்படுத்தப்படும் இரண்டு வெளியீட்டு சாதனங்களை தெரிவு செய்க.
    i. சாவிப்பலகை மற்றும் சுட்டி
    ii. அச்சுப்பொறி மற்றும் காட்சித்திரை
    iii. காட்சித்திரை மற்றும் வலை கமரா
    iv. ஒலிபெருக்கி மற்றும் நுணுக்குப்பன்னி

19. கூட்டற்பொறி மற்றும் பகுப்புப் பொறி என்பனவற்றை உற்பத்தி செய்த விஞ்ஞானிகள் முறையே
    I. பிளேஸி மற்றும் ஜோன் நபியர்
    ii. சாள்ஸ் பாபேஜ் மற்றும் பில்கேட்ஸ்
    iii. பிளேஸி பஸ்கல் மற்றும் சாள்ஸ் பாபேஜ்
    iv. சாஸ்ஸ் பாபேஜ் பிளேஸி பஸ்கல்


20. OCR மற்றும் NIVR என்பவற்றில் தொழிற்பாடுகளை சரியாக விபரிப்பது யாது,
    i. ஒளியியல் எழுத்துக்களை அடையாளம் காண்பது மற்றும் பல்தேர்வு வினாக்களை பரீட்சித்தல்
    ii. பல்தேர்வு வினாக்களை பரீட்சித்தல் மற்றும் காசோலை இலக்கங்களை சரிபார்த்தல்
    iii. காசோலை இலக்கங்களை சரிபார்த்தல் மற்றும் எழுத்துக்களை கண்டறிதல்
    iv. எழுத்துக்களை கண்டறிதல் மற்றும் காசோலை இலக்கங்களை சரிபார்த்தல்

21. பின்வரும் வசனத்தை கருதுக.
    தரிது வலைகமரா மற்றும் நுணுக்குப்பன்னி என்பனவற்றை பயன்படுத்தி வெளிநாட்டிலுள்ள தனது நண்பனுடன் உரையாடினான். தரிதுவால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் வகைப்படுவது.
    i. ஒரு உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு உபகரணம்
    ii. இரண்டு வெளியீட்டு உபகரணங்கள்
    iii. இரண்டு உள்ளீட்டு உபகரணங்கள்
    iv. வெளியீட்டு உபகரணம் மற்றும் உள்ளீட்டு உபகரணங்கள்

22. ஒரு அச்சுப்பொறியொன்றை வாங்கும் போது கட்டாயமாக கவனிக்கப்பட்ட வேண்டிய விடயங்கள்
    A. உயர் தரம்
    B. அச்சுப் பிரதிகளுக்கான குறைந்த கிரயம்
    C. அச்சுப் பிரதிகளுக்கான அதிக நேரம் எடுத்தல்
    மேற்கூறியவைகளில் உண்மையான கூற்றுக்கள் யாவை ?
    i. Aயும் Bயும் ii. Aயும் Cயும் iii. Bயும் Cயும் iv. A,B மற்றும் Cஎல்லாம்

23. வன்வட்டு, இலக்கமுறை பல்விதத் தட்டுகள் (DVD) மற்றும் காந்தநாடா என்பனவற்றின் தொழிநுட்பங்கள் முறையே
    i. காந்த, ஒளியியல், ஒளியியல்
    ii. ஒளியியல், காந்த, ஒளியியல்
    iii. காந்த, ஒளியியல், காந்த
    iv. காந்த, ஒளியியல், திண்மம்

24. 1,2 மற்றும் 3 இலக்கமிடப்பட்ட வன்வட்டின் உட்பகுதியின் படம் தரப்பட்டுள்ளது. 1,2 மற்றும் 3 என்பனவற்றால் குறிப்பவை யாவை ?
    i. நினைவக தட்டு (platter), சுழல் தண்டு (Spindle), தலை (Head)
    ii. சுழல் தண்டு, தலை, நினைவக தட்டு
    iii. தலை, நினைவக தட்டு, சுழல் தண்டு.
    iv. நினைவக தட்டு, சுழல் தண்டு, தூண்டி (Actuator.)



25. பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A. தொலைக்காட்சியானது முழு இருவழிப்போக்கு முறைக்கு உதாரணமாகும்

B. தொலைக்காட்சியானது அரை இருவழிப்போக்கு முறைக்கு உதாரணமாகும்

C. வானொலியானது ஒற்றை முறைக்கு உதாரணமாகும்.

மேற்கூறியவற்றுள் உண்மையான கூற்றுகள் யாவை ?


i. Aயும் Bயும் ii. Aயும் Cயும் iii. Cமட்டும் iv. A,B மற்றும் Cஎல்லாம்

26. மிக வேகமாக தரவுகளை ஊடுகடத்த ஒளியியல் சமிஞ்சைகளை பயன்படுத்தும் மற்றும் காந்த அலைகள் பாதிப்பு ஏற்படுத்தாத ஊடகம் யாது ?

i. ஓரச்சு வடம் (Coaxial Cable) ii. ஒளியியல் நார்கள் (Fiber Optics)

iii. முறுக்கிய கம்பிச்சோடி iv. நுண்ணலைகள்

27. பின்வரும் வரைப்படத்தினால் காட்சிப்படுத்தப்படும் வலையமைப்பு வகை யாது ?



i. உடு வடிவ வலையமைப்பு (Star topology)

ii. பாட்டை வலையமைப்பு (Bus topology)

iii. வளைய வலையமைப்பு (Ring topology)

iv. கண்ணி வலையமைப்பு (Mesh topology)

28. அமில தனது நிறுவனத்திலுள்ள அணைத்து கணினிகளையும் வலையமைப்பாக்க எண்ணி உள்ளார். கணினிகளை வலையமைப்பாக்கத்தினூடாக அமில பெறும் நன்மைகள் யாவை ?

i. ஒரு கணினியிலிருந்து ஏனை கணினிகளுக்கு வளங்களை பகிரக்கூடியதாக இருத்தல்

ii. மையத்திலிருந்து அனைத்து கணினிகளையும் கட்டுப்படுத்தக் கூடியதாக இருத்தல்

iii. குறைந்த மின் பாவணை

iv. தரவு மற்றும் தகவல்களை கணினிகளுக்கிடையே பகிரக்கூடியதாக இருத்தல்

29. தேவபுர மகா வித்தியாலய மாணவர்களால் தங்கள் செயற்றிட்டமாக அலுவலத்தின் 10 கணினிகளை ஆளியை (Switch) பயன்படுத்தி வலையமைப்பாக்கினர். இவ்வலையமைப்பு வகை எவ்விடத்தியல் வலையமைப்பு வகை மற்றும் வலையமைப்பு வகையை சாரும்.

i. பாட்டை இடத்தியல் மற்றும் இடத்துரிப்பரப்பு வலையமைப்பு (LAN)

ii. ஒரு இடத்தியல் (Star) மற்றும் பெரும்பரப்பு வலையமைப்பு (WAN)

iii. வளைய இடத்தியல் (Ring) மற்றும் இடத்துரி வலையமைப்பு

iv. உரு இடத்தியில் மற்றும் இடத்துரி வலையமைப்பு

30. பின்வருவனவற்றுள் செல்லுப்படியாகும் BCD குறிமுறைகளை கொண்ட தொகுதி யாது ?

i. 1100,1010,1000,1001 ii. 1001,0010,0111,1000

iii. 1010,1011,1001,0101 iv. 1001,1110,1010,1100

31. 30.54210 என்ற எண்ணின் மிக குறைந்த பொருளுடைய இலக்கம் (LSD) யாது?

i. 0 ii. 1 iii. 2 iv. 3

32. இரும எண் 101101 இன் பதின்ம பெறுமானம் யாது ?

i. 22 ii. 40 iii. 44 iv. 45

33. பதின்ம எண் 63 இன் இரும பெறுமானம் யாது ?

i. 111110_2 ii. 11111_2 iii. 100010_2 iv. 101010_2

34. ஒரு மாணவன் கணிதத்திற்கு 65 புள்ளியும் ஆங்கிலத்திற்கு 72 புள்ளியும் பெற்றுள்ளான் இரண்டு புள்ளிகளினதும் கூட்டுத்தொகையை இரும எண்ணில் தருக.

i. 10001011_2 ii. 10001001_2 iii. 1001000_2 iv. 10010011_2

35. எண்ம எண் 674 இன் இரும பெறுமானம் யாது ?

i. 110101100_2 ii. 111011100_2 iii. 110111100_2 iv. 110111101_2

36. 76_8, 52_{10}, $A3_{16}$ மற்றும் 564_8 என்பனவற்றில் பெறுமானங்களின் ஏறுவரிசை ஒழுங்கு யாது?

i. $52_{10}, 76_8, A3_{10}, 564_8$ ii. $76_8, 52_{10}, A3_{10}, 564_8$

iii. $564_8, 52_{10}, 76_8, A3_{10}$ iv. $A3_{10}, 76_8, 52_{10}, 564_8$

37. 1321 என்ற எண்ணில் x இனால் குறிக்கப்படக்கூடிய எண் முறைமை யாது?

i. எண்ம ii. எண்ம மற்றும் பதின்ம

iii. இரும எண் மற்றும் பதின்ம iv. இரும எண்ம பதின்ம மற்றும் பதினறும்

38. 378 மற்றும் 297 பதின்ம எண்களின் வித்தியாசத்தை பதினறும எண்ணில் தருக.

i. $A2_{10}$ ii. 78_{16} iii. 32_{10} iv. 52_{10}

39. பின்வருவனற்றுள் 2MB இற்கு சமவலுவானது யாது?

i. 2^{20} B x 2 ii. 2^{30} KB x2 iii. 2^{21}KB iv. 2 x 2 x 2^{20}B

40. பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A. தரம் 10 இற்கு தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாடத்தை தெரிவு பாடமாக அறிமுகம் செய்தல்.

B. உயர் தரத்திற்கு பொது தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாடத்தை கட்டாய பாடமாக்குதல்

C. நேணசல மற்றும் கணினி வள நிலையம் போன்ற கற்கை நிலையங்களை கிராம புற பிள்ளைகளின் அறிவை வளர்ப்பதற்காக நிறுவுதல்

மேற்குறிப்பிட்டவற்றில் இலங்கையில் கணினி அறிவை வளப்படுத்துற்காக பயன்படுத்தக் கூடியவைகள் யாவை ?

i. Aயும் Bயும் மட்டும் ii. Aயும் Cயும் மட்டும்

iii. R உம் Cஉம் iv. A,B மற்றும் C எல்லாம்

LOL.lk
BookStore

විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න



| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න